RS Polyclinic
OUR EXPERIENCED DOCTORS
Dr M. Rajkumar — Sr Vascular Surgeon — 98410 25996
Dr K. Namitha Bhuvaneswari — Sr Eye Surgeon — 9444 268784
Dr Sathish Rajkumar — Laparoscopic & Laser Surgeon — 9445 401793
Dr Shanthi R. — Sr Vascular Surgeon — 9884 65094.5
Dr Salma R — General Physician — 97780 9774.2
Dr Praveena E — Sr ENT Surgeon — 9944 10044.3

தமிழ் குரல் மக்கள்
தினசரி காலை நாளிதழ்
tamilmakkalkurali@gmil.com
RNI No. : TNTAM24840
உள்ளது உள்ளபடி

PASSPORT | MSME | PAN | AADHAAR
FSSAI | PATTA | LEGALHEIR
2,4 WHEELER INSURANCE
PROPERTY TAX, EB - NAME TRANSFER
STATE AND CENTRAL GOVT AUTHORISED FRANCHISEE
ALL ONLINE SERVICES
இ-சேவை மையம்
8148231942 / 8144337349
11, South Perumal Koil Street, Vadapalani, Chennai - 600 026.

ஆசியான் உச்சி மாநாட்டிற்கு இடையே பிரதமர் நரேந்திர மோடி பிலிப்பைன்ஸ் அதிபரைச் சந்தித்தார்

சென்னை – 18 நவம்பர், 2026

பிலிப்பைன்ஸின் மணிலாவில் இன்று (2026 நவம்பர் 17) நடைபெற்ற ஆசியான் உச்சி மாநாட்டிற்கிடையே பிரதமர் நரேந்திர மோடி, பிலிப்பைன்ஸ் குடியரசு அதிபர் பெர்டினாண்ட் ஆர் மார்கோஸ் ஜூனியரை சந்தித்து பேசினார்.

இந்த ஆண்டு ஆசியான் அமைப்புக்கு தலைமை தாங்கிய பிலிப்பைன்ஸின் வெற்றிகரமான செயல்பாட்டிற்கு பிரதமர் வாழ்த்து தெரிவித்தார். 2024-ம் ஆண்டு முதல் ஆசியான் அமைப்பில் இந்தியாவுக்கான ஒருங்கிணைப்பு நாடாக பிலிப்பைன்ஸ் ஆற்றிவரும் பங்களிப்புக்கும், ஆசியான்-இந்தியா உறவு வலுப்பட பிலிப்பைன்ஸ் தொடர்ந்து ஆதரவு அளித்து வருவதற்கும் பிரதமர் பாராட்டு தெரிவித்தார்.

2026-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் புதுதில்லியில் நடைபெற்ற பிரிக்ஸ் உச்சி மாநாட்டிற்கு, ஆசியான் தலைவராக இருந்த பிலிப்பைன்ஸ் அதிபர் பெர்டினாண்ட் ஆர் மார்கோஸ் ஜூனியரை அழைத்திருந்ததையும், அப்போது இருவரும் சந்தித்து உரையாடியதையும் இரு தலைவர்களும் நினைவுகூர்ந்தனர்.

2025 ஆகஸ்ட் மாதம் அதிபர் மார்கோஸ் ஜூனியர் இந்தியாவிற்கு மேற்கொண்ட அரசுமுறைப் பயணத்தின்போது, இருநாடுகள் இடையேயான உத்திசார் கூட்டண்மையின் கீழ், பல்வேறு துறைகளில் ஒத்துழைத்து செயல்படுவது குறித்து ஆலோசிக்கப்பட்டது. அதன்படி, ராணுவம், பாதுகாப்பு, விண்வெளி, ரயில்வே உள்கட்டமைப்பு, நிதித் தொழில்நுட்பம், வர்த்தகம், முதலீடு உள்ளிட்ட பல்வேறு துறைகளில் இருதரப்பு ஒத்துழைப்பு வலுப்பெற்று வருவதை இரு தலைவர்களும் பாராட்டினர்.

பிராந்திய, சர்வதேச அளவில் முக்கிய பிரச்சினைகள் குறித்து இருநாட்டு தலைவர்களும் தங்களது கருத்துக்களை பரிமாறிக்கொண்டனர்.